**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**
Mcop 308 of 2023
.ம.சா.2 அன்பரசி

| | |
|---|---|
| Name | : அன்பரசி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 10.9.2025 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது சுரண்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க ஆய்வாளருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுரண்டை காவல்நிலைய குற்றஎண்.102/23 என்ற வழக்கின் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, பார்வைமகசர், மாதிரிவரைபடம், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை, மற்றும் குற்ற இறுதியறிக்கை ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணங்கள் மூ.த.சா.ஆ 1 முதல் 7 ஆகும்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

ஆறுமுககனி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் எங்கள் காவல் நிலையத்தில் குற்ற எண்.102/23 என்ற வழக்கு யார் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் ராமர் என்பவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆறுமுககனி என்பவர் ராமரின் தகப்பனார் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் இறந்து போன ராமருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால்சரிதான். இந்த வழக்கில் நான் புலன் விசாரணை செய்யவில்லை. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கை புலன்விசாரணை செய்து ஆய்வாளர் செந்தில் என்பவர்

இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் இறந்துபோன நபரே என்பதால் அந்த வழக்கிற்கு எதிராக வேறு எந்த நடவடிக்கையும் இல்லை என முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்து போன நபர் தனக்கு தானே விபத்தை ஏற்படுத்தி கொண்டு இறந்து விட்டார் என்றால் சரிதான்.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.